தமிழ் நாடு சட்டப் பேரவை

திங்கட்கிழமை, 1971 ஜூலை 12.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. அ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

Production of salt.

* 172. *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government are examining the report of the consultants appointed by the State Development Corporation about cultivation of salt; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) மாநிலத்தில் உப்பளத் தொழில் வளர்ச்சி பற்றிய வாய்ப்புக்கூறு அறிக்கை ஒன்று தயாரிக்கும் பணியை தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் சென்னையிலுள்ள உப்பு ஆலோசகரான திரு. எம். எம். குருநாத்திடம் ஒப்படைத்தது. அவர் அறிக்கையை அரசுக்கு சமர்ப்பித்துள்ளார். உப்பு தொடர்பான இரசாயனப் பொருட்களுக்கான தமிழ் நாடு வாரியம் ஒன்றை அரசு அமைத்துள்ளது. வாரியம் விரைவில் செயல்படத் துவங்கும். அது திரு. குருநாத் அறிக்கையில் உள்ள யோசனைகளைப் பரிசிலித்து அரசுக்குப் பரிந்துரைக்கும்.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, உப்பிலிருந்து மருந்து தயார் செய்யும் திட்டம் ஏதாவது அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, உப்பின் அடிப்படையில் ரசாயனத் தொழிற்சாலைகள் எவை எவை அமைக்கப்படும் என்பது இப்பொழுது அரசின் பரிசிலனையில் இருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: தமிழ் நாடு வாரியம் ஒன்று அமைக்கப் பட்டது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். இந்த வாரியத்திற்கு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனரா? அப்படியானால் எப்பொழுது இந்த வாரியம் வேலை செய்ய ஆரம்பிக்கும்? உப்பை உபயோகப்படுத்தும் பல தொழிற்சாலைகள் இருக்கின்றனவே, அவற்றிற்கு உப்பு சப்ளை செய்வதற்கு இந்த வாரியத்தில் ஏதாவது ஆலோசனை கூறப்படுமா?

மாண்புமிகு திரு. செ மாதவன்: அது அடுத்த கேள்வியில் வருகிறது.